அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7
1990, ஜனவரி மாதம் 25ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின்
செயலாளர்கள்,
உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்
அனைவருக்கும்.

மாகாண சபைகளுக்குப் பதவியினர்களை விடுவித்தல்

89.11.15ஆந் திகதியிட்ட 56/89ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள், பணிகள் பரவலாக்கப்பட்டுள்ளதன் விளைவாக, மாகாண சபைகளுக்கு அரசாங்க சேவையாளர்களை இடமாற்றம் செய்வது தொடர்பில் பரவலாக்கப்பட்டுள்ள பணிகளில் சம்பந்தப்பட்ட சகல பதவியினர்களுடன் சேர்த்து மாகாண சபைகளுக்குப் பணிகள் பரவலாக்கப்பட வேண்டுமென்பதே கொள்கையாகுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகின்றேன். எனினும் பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாகாண சபைச் சேவையில் சேருவதற்கான அல்லது அவர்களுடைய முன்னைய சேவைகளில் இருப்பதற்கான விருப்புரிமை அளிக்கப்படல் வேண்டும்.

02. இந்நிலையில் குறிப்பிட்ட மாகாண அரசாங்க சேவையொன்றில் சேர்வதற்கான தனித்தனி உத்தியோகத்தர்களின் விருப்பத்திற்குட்பட்டு பரவலாக்கப்பட்ட பணிகளில் சம்பந்தப்பட்டுள்ள சகல பதவியினர்களையும் மாகாண சபைகளில் சேர்த்துக் கொள்வது அவசியமானதாகும். மாகாண அரசாங்க சேவைகளுக்கான பதவியணி தொடர்பில் சம்பள பதவியணிக் குழுவின் சிபாரிசுகள் மேலே குறிப்பிட்ட அரசாங்கக் கொள்கைக்குட்பட்டு செயற்படுத்தப்படும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மட்டங்களுக்கு (ஒவ்வொரு பரவலாக்கப்பட்ட பணியுடன் சம்பந்தப்பட்ட அரசாங்க சேவையாளர்கள் மாகாண அரசாங்க சேவையில் சேர்வதற்கான விருப்பத் தேர்வை தெரிவித்த பின் அல்லது விருப்பமின்மையைத் தெரிவித்த பின் எஞ்சியுள்ள) மேலதிகமாகவுள்ள பதவியினர்கள் பின்னர் வெளியிடப்படும் வழிகாட்டு நெறிகளின் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள குறைவுகளை சரி செய்வதற்கு பொருத்தமான முறையில் பணிக்கமர்த்தப்படுவர்.

03. அனைத்திலங்கை சேவைகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள இலங்கை விலங்கு வேளாண்மைச் சேவைக்கு இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரச் சேவை என்பதே சரியான பதவிப் பெயர் என்பதைக் கவனிக்குக.

ஒப்பம்: ப. எஸ். எம். பெரேரா.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

எம். எல். ஜயவீர.
இராஜாங்கச் செயலாளர்,
அரசாங்க நிருவாகம்.

பிரதி: - தலைவர், சம்பளங்கள், பதவியணிக்குழு.